**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு ஜுலை மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.5/2025 அதன் அ.வ.எண்.436/2024**

1). சந்தணம்மாள்
2). சண்முகவேல்
3). பத்திரகாளியம்மாள்
4). செல்வக்குமார்
5). ஷர்மிளா
6). பரிமளச் செல்வம் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

–எதிர்–

P.முருகையா ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என்முன்பாக 10.07.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, பிரதான வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையினை இம்மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 18 மற்றும் பிரிவு 151ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுவின் சுருக்கம்</u>**

2.1) அசல் வழக்கானது பிராது 2ம் தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், பிராது 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் 14.09.2022ல் ஏற்படுத்திய ஆவண எண்.3348/2022 மற்றும் 3349/2022 ஆகிய ஆவணங்கள் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியும் எதிர்மனுதாரர்/வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ளது.

2.2) மேலும், மேற்படி பிரதான வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் 13ம் பத்தியில் 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தாக புல எண்.116/5ல் தென்பாதி 58 செண்டு என்பதற்கு பதிலாக வடபாதி 58 செண்டு என தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டு விட்டது என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்குரிய 14.09.2022 தேதிய பதிவு பாக விடுதலை ஆவணத்தில் மேற்படி மனுதாரர்களுக்குரிய பாகமானது புல எண்.116/5ல் தென்பாதி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.3) எனவே, எதிர்வழக்குரையின் 13ம் பத்தியில் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்ட 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தான புல எண்.116/5ன் வடபாதி 58 செண்ட் என இருப்பதை மாற்றி வட பாதி என்பதற்கு பதிலாக தென்பாதி என திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும், அவ்விதம் சரியான பகுதியை பொறுத்து மனுதாரர்களின் எதிர்வழக்குரையை திருத்தம் செய்தால் மட்டுமே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தனது சரியான கட்சியை நிரூபணம் செய்ய இயலும் என்றும், எனவே, எதிர்வழக்குரையில் சீர்திருத்த செய்ய வேண்டுமென்று கோரி இம்மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிருரை சுருக்கம்</u>**

3.1) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், 1ம் தபசில் சொத்தில் முத்தப்பகோனாருக்கு வாய்மொழி பாகப் பிரிவினைக்கு முன் சரிபாதி சொத்தான 1 ஏக்கர் 66 செண்டு உரிமையுள்ளது என்பது இந்த மனுதாரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்திகள் என்றும், மேலும், மேற்படி பாகப்பிரிவினை அடிப்படையில் முத்தப்பகோனாரின் மகனான செல்லையா கோனாருக்கு 5ல் ஒரு பங்கான 33 செண்டு சொத்து சர்வே எண்.116/10ல் தென்பகுதியில் ஒதுக்கப்பட்ட நிலையில் அதற்கு தனிப்பட்டா எண்.315ம் வழங்கப்பட்ட நிலையில் சர்வே எண்.116/5ல் உரிமையுள்ளது என்பதை காட்டுவதற்கு எந்த ஒரு உரிமை ஆவணங்களை தாக்கல் செய்யாத நிலையில், முத்தப்ப கோனாரின் பெண் வாரிசுகள் தங்களுக்குரிய 4/5 பங்கை ஆண் வாரிசான செல்லையா கோனாருக்கு விட்டுக் கொடுத்ததாக இந்த மனுதாரர்களின் எதிர்வழக்குரையில் கூறாத நிலையிலும், மனுதாரர்கள் கோரியுள்ள எதிர்வழக்குரை திருத்தம் சட்டப்படி அனுமதிக்கத்தக்கல்ல என்றும் கூறப்பட்டுள்ளது

3.2) பிராதில் எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணமான 18.04.1959 தேதியிட்ட வாரிசு அடிப்படையில் எதிர்மனுதாரரின் தாயார் உடையம்மையின் 33 செண்டும் சேர்த்து முள் காடாக இருந்த 1 ஏக்கர் 99 செண்டு பங்கு சொத்தை திருத்தி அனுபவம் செய்து வருவதை இடைஞ்சல் செய்து அபகரிக்கும் நோக்கில் மனுதாரர்கள் எதிர்வழக்குரை சீர்திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் 1ம் தபசில் சொத்தின் முந்தைய ஆவணமான எதிர்மனுதாரர்/வாதி தரப்பு ஆவணமான 08.05.1947 தேதிய கிரையப் பத்திரத்தையோ, முத்தப்ப கோனார் மற்றும் செல்லையா கோனாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்யாமல் மோசடியாக

பெறப்பட்ட பட்டாக்களின் அடிப்படையில் 14.09.2022 தேதிய பதிவு செய்யப்பட்ட பாக விடுதலை ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும் கூறப்பட்டுள்ளது.

3.3) செல்லையா கோனாரின் வாரிசுகள் மொத்தம் 6 நபர்கள் என்றும், மேற்படி விபரங்களை மறைத்து செல்லையா கோனாருக்கு 2ம் மனுதாரர் மற்றும் லேட்.கருப்பசாமி மட்டுமே வாரிசுகள் எனக் கூறி போலியான தகவல்களின் அடிப்படையில் பெறப்பட்ட பட்டா எண்.996 மற்றும் 1163 ஐ வைத்து மோசடியாக பதிவு செய்யப்பட்ட 14.09.2022 தேதிய பதிவு பாக விடுதலை ஆவணத்தின் அடிப்படையில் எதிர்வழக்குரையை சீர்திருத்தம் செய்யக் கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது எனக் கூறப்பட்டுள்ளது.

4) **இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு மனுவில் கண்டவாறு எதிர்வழக்குரையை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியம் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இந்த வழக்கானது எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) அசல் வழக்கானது வழக்கு எழுவினாக்கள் வனைவதற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள போது, இந்த மனு மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையின் 13ம் பத்தியில் 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தான புல எண்.116/5ன் தென்பாதி 58 என்பதற்கு பதிலாக வடபாதி 58 செண்ட் என தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், 14.09.2022ம் தேதிய பாக விடுதலை ஆவணத்திலும் தங்களுக்குரிய பாகமானது புல எண்.116/5ல் தென்பாதி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

9) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இருந்த போதிலும், இந்த வழக்கின் விசாரணை முடிவில் தான் 14.09.2022ம் தேதியிட்ட பாக விடுதலை ஆவணம் செல்லத்தக்கதா அல்லது செல்லா நிலை உடையதா என்று உத்தரவு பிறப்பிக்க முடியும் என்பதாலும், இந்த வழக்கு தற்போது வழக்கெழுவினா வனைவதற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

10) இந்த வழக்கின் விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்பு எதிர்வழக்குரையினை திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரருக்கு பதில் வழக்குரை தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது என்பதை கருத்தில் கொண்டும், எதிர்வழக்குரையை திருத்தம் செய்தால் ஒரு வேளை இந்த வழக்கினை சரியாக தீர்வு செய்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டும், இந்த மனுவை அனுமதிப்பதால் தரப்பினர்களுக்கு இடையில் உள்ள பிரச்சினைக்கு இதே வழக்கில் அறுதியாக தீர்வு காண இயலும் என்பதாலும், மேலும், இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டால் அது தரப்பினர்களுக்கு இடையே பொருள் மற்றும் காலவிரையத்தை ஏற்படுத்தும். என்பதாலும், மேலும் பல்வேறு

வழக்குகள் எழக்கூடும் என்பதாலும் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

***முடிவாக, மனுதாரர் ரூ.1000/— எதிர்மனுதாரருக்கு 21.07.2025க்குள் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 21.07.2025.***

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு ஜீலை மாதம் 17ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.07.17 06:53:28 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> - இல்லை
<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> -
ம.சா.ஆ.1 செல்லையா கோனார் என்பவரின் வாரிசு சான்றிதழ் நகல்
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> - இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> -

எ.ம.சா.ஆ.114.09.2022 தேதியிட்ட பாக பாத்திய விடுதலை ஆவணம் நகல்

எ.ம.சா.ஆ.2 14.09.2022 தேதியிட்ட பாக பாத்திய விடுதலை ஆவணம் நகல்

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.07.17 06:53:33 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.5/2025 அதன்</u>**

**<u>அ.வ.எண்.436/2024</u>**

சீரான/ வரைவு – உத்தரவு

<u>17.07.2025.</u>